# தமிழிசை
# பேரறிஞர் மு.ஆபிரகாம் பண்டிதரின்
## வரலாற்றுக் குறிப்புகளும் மகத்தான சாதனைகளும்

ஒளிமங்கிய இசை விளக்கிற்கு நெய்பெய்து தூண்டிவிட்டு ஒளியூட்டித் தமிழ் இசைத்துறையைப் பிரகாசிக்கச் செய்தவர் திரு.மு.ஆபிரகாம் பண்டிதர் அவர்கள். இவர் குற்றாலம் அருகே சாம்பவர் வடகரை, சாம்புவனோடை என்ற ஊரில் 02.08.1859இல் பிறந்தார். பெற்றோர் முத்துச்சாமி நாடார் – அன்னம்மாள் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் சுரண்டை என்னும் ஊரிலுள்ள பள்ளியில் 8ஆம் வகுப்புவரை படித்தார். பின்னர் திண்டுக்கல் நிர்மல் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் பயின்றார். பின் அதே பள்ளியில் 1876-இல் ஆசிரியரானாா. தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலியவற்றில் புலமை பெற்றவர். வழிப்போக்கர்களாகச் செல்லும் சந்நியாசிகளைக் கேட்டுத் தெளிவடைந்தார். திண்டுக்கல்லை அடுத்து இருந்த சுருளிமலைக்குச் சென்று கருணானந்தர் என்ற புகழ் பெற்ற சித்தரைத் தரிசித்து கொடிய பிணிகளை நீக்கவல்ல சஞ்சீவி மருந்துகளின் செய்முறைகளைக் கற்றார். 1882இல் நஞ்சங்குளத்தைச் சேர்ந்த ஞானவடிவு பொன்னம்மையைத் திருமணம் செய்து கொண்டார். 1883ஆம் ஆண்டில் தஞ்சை வந்தார். அங்குள்ள நேப்பியர் மகளிர் பள்ளியில் ஆபிரகாம் அவர்களும் அவரது துணைவியாரும் ஆசிரியப்பணியை மேற்கொண்டனர். தாய்வழிப் பெரியோரும், தந்தைவழி பெரியோரும் மருத்துவர்களேயாதலால் இவருக்கு மூலிகை மருத்துவத்தில் மிகுந்த நாட்டம் ஏற்பட்டது. சித்த மருத்துவத்தில் வருவாய் அதிகரித்ததும் ஆசிரியப்பணியை விட்டுவிட்டார்.

ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் தாம் செய்யும் மருந்துகளைத் தென்னத்திலும் அயல்நாட்டிலும் பரவச்செய்து மக்கள் உடற்பிணியைப் போக்கும் தொண்டினை மேற்கொண்டார். 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் கருணானந்தர் மருந்துகள் பரவி இருந்த அளவு வேறு மருந்துகள் பரவவில்லை எனில் மிகையாகாது. இம்மருந்துகள் சம்பந்தமாகக் கடிதப் போக்குவரவுக்காகவே தஞ்சைத் தலைமை அஞ்சல் நிலையத்தில் ஒரு தனிப்பட்ட எழுத்தாளரை நியமித்திருந்தார்கள் என்றால் இம்மருந்துகள் எவ்வளவு தூரம் பரவி இருந்தன என்பது நாம் கூறாமலே விளங்கும். தமது மூலிகைகளைப் பயிர் செய்வதற்கென்றே அவர் ‘பண்டிதர் தோட்டத்தை’ நிறுவினார்.